பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்".

யோவான் 14:1

செய்தி மலர்
2022
அக்டோபர்

இதழ் : 06
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



அன்பில் நல்ல ஆண்டவர், இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையின் குடும்பங்கள், வாலிபர்கள், பிள்ளைகள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிப்பதில் மிகவும் களிகூருகிறேன். கடந்த மாதம் முழுதும் நம் அனைவரையும் கண்ணின் மணிபோல பாதுகாத்து, வழிநடத்தி, ஆசீர்வதித்த நம் தேவாதி தேவனுக்கு நாம் அனைவரும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லி துதிக்கலாம். சபையின் மூலமாக நடைபெற்ற எல்லா ஆராதனைகள், ஜெபகூடுகைகளிலும் அநேகர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றனர். கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக.

சபையின் சிறுபிள்ளைகள் பயமின்றி, விடுதலையோடு முன்பு போல பள்ளி சென்று வர கிருபை பாராட்டினார், தேவ தூதர்கள் பிள்ளைகளோடு இருந்து பாதுகாத்து வருகின்ற தயவிற்க்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம், பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும், நல்லபடியாக படிக்கவும் ஜெபித்துக் கொள்ளலாம்.

இவ்வருடம் கடந்த ஒன்பது மாதங்கள் சுகத்தோடும், பெலத்தோடும் நம்மை நடத்தின ஆண்டவர்தாமே வருகின்ற மாதத்திலும் நம்மை நடத்த வல்லவராயிருக்கிறார், ஆதலால் நாம் எதைக் குறித்தும் கலங்காமலும், திகையாமலும் இருந்து வேலையிடங்களிலும், வீட்டிலும், ஊழியத்திலும், சபையிலும் தேவ நாமத்தை மகிமைபடுத்துவோமாக.

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.” யோவான் 14:1.

என்ன ஒரு ஆறுதலான, தேற்றுகின்ற வார்த்தைகளை ஆண்டவர் நமக்கு அளித்திருக்கிறார்.

இன்று நமக்கு இருக்கின்ற கலக்கங்கள், துக்கங்கள், நிந்தைகள், போராட்டம் எல்லாவற்றையும் மாற்றி நம்மை கலங்காதே, திகையாதே மகனே, மகளே என்று சொல்லுகிற தேவ சத்தத்திற்கு செவி கொடுப்போமா, அவர் வாசற்கதவில் இருந்து தட்டுகிறார். நம் இருதயத்தை அவருக்கு திறந்து கொடுப்போமா? அவர் உள்ளே பிரவேசிக்க அனுமதித்தால் ஒரு வெளிச்சம் நம்மில் வரும்.
இயேசுவை விட்டு பிரிந்து வாழ்வது என்பது கூடாதகாரியம், அவர் தம்மை ஒரு இமைபொழுதும் கைவிடாதவர். "ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களை தேற்றுவேன். நீங்கள் எருசலேமிலோ தேற்றப்படுவீர்கள்"

நம்மை தேற்றும்படியாக நமக்கு ஒரு தேற்றரவாளனை தேவன் கொடுத்திருக்கிறார். இருதயத்திலே கலக்கம் என்பது நமக்குமட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவிற்கும் கூட வந்தது என்று வேதத்தில் அநேக இடங்களில் காண்கிறோம்.
லாசருவின் கல்லறையன்டையில் கண்ணீர் விட்டார், கெத்சமனே தேட்டத்தில் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்தார். ஆகவே நம் இயேசு உபத்திப்பட்டபவர்களின் உபத்திரவத்தை அற்பமாக எண்ணாதவர்.

"உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக " என்று சொல்லி நம்மை தம் தோளின் மீது சாய்த்து, அனைத்து ஆறுதல் அளிக்கிறவராகவே இன்னும் ஜீவிக்கிறார்.

கடல் கொந்தளிக்கும் போது எப்படி நங்கூரத்தைப் போட்டு கப்பலை நிறுத்துவார்களோ, அப்படியே நாமும் நம்முடைய விசுவாசத்தினாலே கலங்காமலும், திகையாமலும் இருக்க தேவன் விரும்புகிறார். நாம் கர்த்தரை நோக்கி, துகிக்கின்ற துதி, துதியின் ஆராதனை நம்மை எல்லா இடுக்கன், மனக்கலக்கத்திலிருந்து விடுதலையை கொடுக்கும். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்"– சங் 34:1 என்று சொன்ன தாவீதைப் பார்த்து கர்த்தர் சொன்னார் " என் இருதயத்திற்கு ஏற்றவன்" என்று, தேவனுக்கு பிரியமான சகோதரனே, சகோதரியே அதே தேவன் நம்மையும் பார்த்து சொல்ல நாமும் அப்படியாக எந்நாளும் அவரை துதித்து, அவரையே நம் வாழ்வில் மையப்படுத்துவோம்.

"என் உதடுகள் உம்மை துதிக்கும், என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத்துதித்து, உமது நாமத்தை சொல்லி கையெடுப்பேன்" (சங் 63:3).

கலக்கங்கள் வரும்போது கர்த்தருடைய பாதத்தில் காத்திருப்போம். மார்த்தாள் அநேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு, கலங்கினாள், மரியாளோ கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருந்து தன்னை விட்டு எடுபடாத நல்லபங்கை தெரிந்துகொண்டாள். கர்த்தருக்கு காத்திருந்து, புதுபெலனடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்ப கர்த்தர் கிருபை செய்வார். கர்த்தர் நமக்காக எதையும் செய்து முடிப்பார், நாம் கலக்க நேரத்தில் பதற வேண்டியதில்லை, திடமனதாயிருப்போம். அவரை மனதார துதிப்போம். அவர் சமூகத்தில் காத்திருப்போம். தேவ கிருபை நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ளும் ஆமென்.

வருகின்ற மாதத்தில் அனுசரிக்க இருக்கின்ற ஆண்டுவிழாவிற்காகவும், ஒவ்வொரு பகுதியிலும் தேவ நாமம் மாத்திரமே மகிமைப்படும் படியாய், ஜெபிப்போம். இம்மாதம் நடைபெறப்போகின்ற பொதுமன்றம், எல்லா ஆராதனைகள், ஜெபகூடுகைகள், விசேஷித்த கூடுகைகள் எல்லாவற்றிலும் அநேகர் பங்குபெற்று தேவ நாமத்தை உயர்த்தவும், ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் கருத்தாய் ஜெபிப்போம், ஜெயமெடுப்போம். ஆமென், அல்லேலூயா.

சபை ஊழியர்,
**சகோ.ஜெயசேகர்**

## தேவ செய்தி

### தனிமையிலே இனிமை காண முடியுமா

கர்த்தரும் அருமை இரட்சகருமாகிய நம் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. இந்த தேவ செய்தி வழியாக உங்களை கிறிஸ்துவுக்குள் சந்திப்பதில் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

தேவனுக்கு பிரியமானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் ஏதேனும் கசப்பான நிகழ்வுகள் ஏற்படுகின்ற பொழுது அநேகர் செய்கின்றபெரும்

தவறு நம்மை நாமே நம் தேவனிடமிருந்து பிரித்து பார்ப்பது. கர்த்தர் என்னை மறந்தார், என்னை கைவிட்டார், என் கூப்பிடுதலுக்கு கர்த்தர் செவி சாய்க்கிறதில்லை, மனிதர்களுடைய ஒத்தாசையும் எனக்கு இல்லாமல் அற்றுப் போயிற்று, ஆகவே நான் தனிமையிலே விடாய்த்தவனும் கைவிடப்பட்டவனுமாய் இருக்கிறேன் என்று எண்ணி நம்மை நாமே தனிமைப் படுத்துகிறோம். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20) என்று நமக்கு வாக்கு பண்ணின நம் இரட்சகர் இயேசுவை முற்றும் மறந்து விடுகிறோம்.

இந்த உணர்வினால் வேதத்தை வாசித்து தேவனோடு இணைந்து வாழாதபடி நாமே நமக்கு தடையை உண்டாக்குகிறோம், ஜெபத்தின் வழியாக தேவனோடு பேசுவதை இழக்கிறோம், "உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்" (உபா. 28:1) என்று வாக்கு பண்ணி இருக்கிற நம் கர்த்தரை ஆராதித்து தொழுது கொள்வதை தவிற்கப்பார்க்கிறோம். இது போன்ற எதிரான செயல்களால்நம்மை தேவனிடமிருந்து பிரித்து வைப்பது நாமே என்றால் மறுக்க முடியுமா?

வேதத்தில் நாம் வாசித்தும் அறிந்தும் இருக்கிறது போல அநேக தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கும் உண்டான உபத்திரவங்கள் நமக்கு உண்டாகவில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அதற்காக நன்றியோடு தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

பவுலையும் சீலாவையும் அநேக அடி அடித்த பின்பு சிறைச்சாலையிலே வைத்து அவர்களை பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக் காரனுக்குக் கட்டளையிட்டார்கள் (அப். 16:23) என்று வேதத்தில் வாசிக்கிறோம். அவர்கள் செய்த குற்றம் என்ன? ஜனங்களுக்கு நன்மை உண்டாகும்படி தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக கர்த்தருடைய பணியை செய்தார்கள் (அப். 16:16-18) என்று வேத வாக்கியங்களே சாட்சி கொடுக்கிறது.

எந்த குற்றமும் செய்யாமல் அநேக அடிகள்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் ஒரு கணமேனும் கர்த்தர் எம்மை கைவிட்டார், எல்லா உதவிகளும் அற்றுப் போயிற்று, நாங்கள்

தனித்தவர்களாக்கப்பட்டோம் என்று இமைப் பொழுதேனும் அவர்கள் சிந்திக்கவில்லை... நினைக்கவில்லை.வேதம் அவர்களை குறித்து "நடு இராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி தேவனை துதித்துப் பாடினார்கள்" (அப். 16:25) என்று சொல்லுகிறது. இவர்களுக்கு உண்டான மிகுந்த கசப்பான நிலையிலும் இவர்கள் ஜெபத்தில் தரித்திருந்து தேவனை துதித்ததினால் அப்பொழுதுதானே சிறைச்சாலையின் "கதவுகளெல்லாம் திறவுண்டது. ஏல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று" (அப். 16:26) என்று வேதம் சாட்சி கூறுகிறது.

என்னுடைய நிலைமை மாராவின் (கசப்பான) தண்ணீரைப் போல் இருக்கிறது என்று சொல்லுகிறவர்கள்... என்னுடைய நிலைமை பாலைவனத்திலும்... தனித்தவனுமாய் இருக்கிறேன் என்று எண்ணுகிறவர்கள்... ஜெபத்தில் தரித்திருந்து பவுலையும் சீலாவையும் போல தேவனை துதிக்கின்ற பொழுது நம்முடைய வாழ்க்கை மதுரமாக மாறும். அடைக்கப்பட்ட வாசல்கள் திறக்கும், வாழ்க்கையில் காணப்படுகின்ற கட்டுகளெல்லாம் கழன்று போகும், நாம் தனித்தவர்களாய் காணப்படுவதில்லை. யோசு. 1:9 சொல்லுகிறது போல "திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருக்கிறார்" என்ற தேவ வசனத்தின்படி தேவன் நம்மோடு இருப்பதால், நாம் அவரோடு இருப்பதால் நம் வாழ்வு தனிமையானதாக அல்ல... இனிமையானதாகவே மாறும். எங்கும் எதிலும் ஜெயம் நமதே. தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

கர்த்தரின் பனியில்,
**சகோ. ஆரோக்கிய தாஸ்**

# Kids Corner

## BACK TO SCHOOL!!

Olive was super excited because she was going to be starting primary school in the morning. To celebrate her transition to primary school, Mom bought Olive a new lunch box, it was bright orange

with balloons on it. Olive couldn’t wait to go to school and use her brand-new lunch box.

Early the next morning before anyone was awake in the house, Olive woke up and got ready to school. Olive reached school happily. Her place was close to the window in the new classroom. In the desk next to her was a girl called April. Olive smiled at April and whispered “Hello” but April did not even smile back instead she poked her tongue out at Olive. Olive was a little surprised by what April had done because her Mom had always told her it was very bad manners to poke your tongue out at people. So, Olive tried to say hello to April again, but this time she offered her hand. April took her hand and squeezed it really hard, she squeezed it so hard that Olive’s eyes welled up and two giant tears rolled down her cheeks.

Suddenly school was not fun anymore, Olive felt all alone, and her hand hurt where April had squeezed it. It was only her first day of school and already Olive just wanted to go home soon. Olive didn’t know what to do, she really wanted to be friends with April, but she was not being nice.

During playtime, Olive eagerly went to the playground with her class. April was already there, and she said to Olive, “You cannot come in here” Olive asked, “Why not?” and April said, “because I said so!” Olive was very unhappy. April and few other girls together were playing happily and did not allow Olive to join with them in their game. All the excitement and joy of being in school was evaporating and Olive felt like she did not belong.

At home, that evening Mom and Daddy had made Olive’s favorite dinner to celebrate her first day in Primary school. Daddy asked, “Olive is everything alright?” Olive began to talk about her first day at school and when she got to the part where April poked her tongue out and then how she squeezed her hand hard, tears started to fall down Olive’s cheeks.

Daddy pulled Olive close and said to her, “So, you’ve had a hard day at school?” Olive just nodded her head miserably. Daddy said to Olive that there are two ways we can help you to deal with this

issue; firstly, Mom and I could come with you to school tomorrow and speak with your class teacher, or we could show you what you can do if April or anybody does something like this again. Daddy said "Olive when somebody does or says something you do not like you must say to them in a firm voice, "Stop it! I don't like what you are doing" then, you must walk away". Sometimes, you may meet people like April who behave in inappropriate ways and hurt you, if this should happen to you, please talk to your parents, or let somebody you trust know about it.

***Prayer :*** Dear Lord, help me to be bold when people bully me or hurt me. I should also not hurt or bully others in school or anywhere. I am sorry Lord for saying bad words. Help me to speak only good words that makes you happy. In Jesus' name I pray, Amen.

***Verse to memorise :*** Don't use foul or abusive language. Let everything you say be good and helpful, so that your words will be an encouragement to those who hear them. - *Ephesians 4:29*

Amen

## வாலிபர் பகுதி

### உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை

**கிறிஸ்துவுக்கு பரியமான அன்பு சகோதர, சகோதரிகளே இந்த தேவ செய்தியின் மூலம் பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இடைபடுவாராக ஆமென்.**

**ஆதியாகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கின்றோம் கடவுல் எவ்வலவு அழகாய், நேர்த்தியாய் ஒவ்வென்றாய் உருவாக்கினார் என்று. பின்பு பிதாவாகிய தேவன் ஆணும் பெண்ணுமாய் ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கினார்.**

**விசேஷமாய் ஆதாமை மண்ணை பிசைந்து தன்னுடைய சுவாசைத்தை ஊதினார். பின்பு அவனிலிருந்து ஏவாளை**

உருவாக்கினார். இதிலிருந்து நாம் என்ன புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால் தேவன் அவருடைய விருப்பத்தின் படி மிகவும் சந்தோஷமாய் சகலத்தையும் உண்டாக்கினார்.

எந்த அளவிற்க்கு ஆண்டவர் சந்தோஷப்பட்டார் என்றால் ஆதி:1:31 "அப்பொழுது தேவன் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார் அது மிகவும் நன்றாயிருந்தது."

ஆதி மனிதர்களான ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் தன்னை போல சிந்திக்கவும் செயல்படவும் கூடிய சுதந்திரம் கொடுத்திருந்தார். அதினோடுக்கூட கீழ்ப்படிய வேண்டுமென்ற கட்டளையையும் கொடுத்திந்தார்.
ஆதி 1:26 "பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக".

தேவன் உண்டாக்கின சகல ஆசீர்வாதங்களையும் அவர்கள் சுதந்தரித்தார்கள்.
ஒரு நாள் வந்த பிசாசு சொன்ன ஒரே ஒரு ஆசை வார்த்தையின் நிமித்தம் ஏவாளும், ஆதாமும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் விழுந்துப்போனார்கள்.
1யோவான் 2:17 "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்."

## உலக சிநேகம் கொண்ட சிம்சோன்:

சிம்சோனைப்பற்றி கர்த்தர் சொன்ன வார்த்ததை நியாயதிபதிகள் 13:5 "நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்."

தேவ ஆவியைப் பெற்ற சிம்சோன் தான் கண்களால் கண்டதை இச்சித்து அதை சாப்பிட்டான்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கத்தில்) . . .

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..
... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஜோசப் அருள்செல்வன் தர்மர்
செல்வன்.நத்தானியேல் நக்கீரன்
செல்வி. ஷாலோம் கிரேஸ்
செல்வி. கீதா கொம்மையன்
சகோ.சுஜின் ஹெக்கில்
செல்வன். சாலமோன் இம்மானுவேல்
சகோதரி. லின் டிஃப்னி ஜெபசிங்
சகோதரி. ஜீவரத்தினம் மகேஷ்ராஜ்
சகோ. ஸ்டாலின் சுனில் வின்ஸ்
செல்வன். ஜீவன் ஆஷ்வா பிரசாத்
சகோ. வர்கீஸ்
செல்வி. ரியா பிரிட்டி
செல்வன். ஆதித் சிங் சுபின் சிங்
செல்வி. வைதேகி கலிய மூர்த்தி
செல்வன். ஹனீஷ் தினேஷ்குமார்
செல்வி. பிரியங்கா சதீஷ்குமார்
சகோதரி. தமிழ்செல்வி ஞானசேகர்

சகோ. மார்க் ஆன்டனி
செல்வன். ஆத்ரியல் ஆதான் ராஜேஷ்
சகோதரி. அனீஷா ஆல்வின்
செல்வன். ரோஷன் அசோக்குமார்
சகோதரி. ஆஷா பாலகிருஷ்ணன்
சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
சகோ. ராஜேஷ் C.R
சகோ. தம்புகுமார் டென்னிஸ்
சகோதரி. ஜெபராணி விபின்
செல்வன். தினேஷ் அருள்மணி
செல்வன். இபின் கேட்சில் ஜெயக்குமார்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. பியூலா மெர்ஸ்சி ஜெகநாதன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. குமாரசாமி

திருமதி & திரு. விபின்

திருமதி & திரு. ஜான் கெட்சன்

திருமதி & திரு. செங்குட்டுவன்

**என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.** (யோவேல் 2:26)

11

# 2022 அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/10/2022 | சகோ.தாமஸ் | சகோ.சுகுமார் |
| 09/10/2022 | சகோ.காட்டீஸ் | சகோ.பக்த ராஜ் |
| 16/10/2022 | சகோ.எபிநேசர் (GTC) | சகோ.சாம் ஆனந்து |
| 23/10/2022 | சகோ.ஜெயசேகர் | சகோ.அசோக் குமார் |
| 30/10/2022 | சகோ.கிறிஸ்டோபர் .M | சகோ.எபிநேசர் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/10/2022 | சகோ.ஏசுரெத்தினம் | சகோ.ஸ்டாலின் |
| 14/10/2022 | சகோ.டேவிட் | சகோ.ஜெகநாதன் |
| 21/10/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/10/2022 | சகோ.ஆரோக்கிய தாஸ் | சகோ.கிறிஸ்டோபர் .J |

**07/10/2022 அன்று பொது மன்ற கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை

**15/10/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
கூடுகையை பொறுப்பொத்து நடத்தும் குடும்பம்– சகோதரி.லதா கிறிஸ்டோபர்
(வேத வினா பகுதி–ஆகாய், சகரியா, மல்கியா)

**28/10/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
(வேத வினா பகுதி–எஸ்றா & எஸ்தர்)

# 2022 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1.கர்த்தர் விசாரிப்பவை எவை?

2.பலவான் கையின் அம்புகளுக்கு ஒப்பானவர் யார்?

3.பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் கர்த்தர் செய்தது என்ன?

4.கண்ணீரோடு ______________ கெம்பீரத்தோடு ______________

5.யாருடைய சேனைகள் ஒழிந்து போகும்?

6.கர்த்தர் தாவீதோடு செய்த உடன்படிக்கை என்ன? வசனம் இருப்பிடம் மட்டும் தருக. . .

7.தலைக்கு எண்ணெய் போலிருப்பது எது?

8.கர்த்தர் ______________ ______________செய்து ______________?

9.யார் மேல் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்?

10.இசை விணைப்பான நகரம் எது?

11.காற்று எங்கிருந்து புறப்பட்டு வருகிறது?

12.கபடநாவுக்கு என்ன கிடைக்கும்?

13.உமக்கு ______________ செய்ய எனக்கு ______________?

14.இரட்சிப்பினால் அலங்கரிக்கபடுகிறவர்கள் யார்?

15.விரோதமாய் எழும்பின மனுஷரிடமிருந்து எது தப்பிற்று?

விடைகளை வருகின்ற 20-10-2022க்குள் (WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் சங்கீதம் 120-147 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2022 –செப்டம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1.இரட்சிப்பின் கெம்பீரசத்தம் (சங் 116:5)
2.யோசேப்பு (சங் 105:17,18 )
3.கர்த்தருடைய கட்டளைகளெல்லாம் (சங் 111:7)
4.பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருடைய பயப்படுகிறவர்கள் மேல் அலருடைய கிருபை அவ்வளவு பெரியதாயிருக்கிறது (சங் 103:11)
5.துன்மார்க்கன் (சங் 109:7)
6.சீயோன் (சங் 102:13)
7.இஸ்ரவேல் (சங் 105:45)
8.செம்மையானவர்கள் (சங் 112:2)
9.மனுஷனுடைய நாட்கள் (சங் 103:15,16)
10.வானங்கள் கர்த்தருடையது பூமி மனுபுத்திரர் (சங் 115:16)
11.விக்கிரகங்கள் (சங் 106:36)
12.கர்த்தருடைய விருட்கங்கள், லீபனோனின் கேதுருக்கள் (சங் 104:16,17)
13.நீதிமான் (சங் 112:6,7)
14.புகை (சங் 102:3)
15.கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரங்களிலும், எருசலேமின் நடுவிலும் (சங் 116:19)

## 2022– செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.பியூலா ஜெகன்நாதன்
Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.மரகதம் ஸ்டீபன்
Sis.சுபா ஸ்டீபன்
Sis.விஜயா ஆன்டனி
Sis.வனித்தா
Sis.ஜெஸ்லெட்
Sis.ஜீனா சதீஷ்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Bro.ஜெகன்
Bro.பால்ராஜ்

நியாயதிபதிகள் 14:9 "அவன் அதைத் தன் கைகளில் எடுத்து, சாப்பிட்டுக்கொண்டே நடந்து, தன் தாய்தகப்பனிடத்தில் வந்து, அவர்களுக்கும் கொடுத்தான்; அவர்களும் சாப்பிட்டார்கள்; ஆனாலும் தான் அந்தத் தேனைச் சிங்கத்தின் உடலிலே எடுத்ததை அவர்களுக்கு அறிவிக்கவில்லை."
நியாயதிபதிகள் 16:1 " அவன் வேசியைக் கண்டு அவனிடத்தில் போனான்".

இறுதியாக உலகப்பிரகாரமான சிநேகத்தால் சிம்சோன் தேவன் தனக்கருளிய பலத்தை இழந்தான் என்று நாம் பார்க்கின்றோம்.
நியாயதிபதிகள் 16:17 "தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னைவிட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்."
யாக்கோபு 1:15 "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்."

## உலகத்தை ஜெய்த்த இயேசு கிறிஸ்து:

இயேசு கிறிஸ்து நாற்பது நாள் வனாந்திரத்தில் உபவாசத்தோடு தனித்திருந்த போது அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டார். உலக இச்சைகளை பிசாசு அவருக்கு காண்பித்தான் அவைகளை சத்திய வசனத்தினால் மேற்க் கொண்டார்.
மத்தேயு 4:2 "அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று."
ஜனங்கள் அவரைப்பிடித்து இராஜாவாக்க மனதாயிருந்தார்கள். ஆனால் அவர் அங்கிருந்து விலகிப்போய்விட்டார்.
யோவான் 6:15 "ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்."

பின்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடத்தில் தன் மரணத்தைக் குறித்து சொன்னார் அப்பொழுது பேதுரு அவரைக் கடிந்துக் கொண்டான்.

மத்தேயு 16:22 "அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்."

இப்படிப்பட்ட உலக பிரகாரமான காரியத்துக்கு இசைந்து போகாமல் அவைகளை அவர் ஜெய்த்தார்.

யாக்கோபு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு சபைகளுக்கு சொல்லும் காரியம் என்னவென்றால் யாக்கோபு 4:4 "விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்."

மத்தேயு 6:24 "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது."

அன்பான தேவ பிள்ளைகளே நாம் எப்படியிருக்கின்றோம்? ஆதாம், ஏவாள் மற்றும் சிம்சோன் இவர்களைப் போல் உலகத்துக்கு இசைந்து தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறோமா இல்லை நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் போல உலக இச்சைகளை ஜெய்க்கிறவர்களாய் இருக்கின்றோமா நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசுவைப் போல உலகத்தை ஜெய்க்க என்னை நான் அற்பணிக்கின்றேன். நீங்களும் அற்பணிப்பீர்கள் என்று தேவனுக்குள் நான் விசுவாசிக்கின்றோன். ஆமென்.

**வாலிபம் இயேசுவுக்கே!!!**

## மிஷனரி செய்தி

பல மிஷனரிகள் தங்கள் உயிரை துச்சமாய் எண்ணி இயேசுவின் அன்பை அறிவிக்கும் ஆவலுடன் தமக்கு நேர்ந்த எல்லா பாடுகளையும் சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொண்டனர். அப்படிப்பட்ட மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்றை அறிந்திருக்க வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்துவனின்

கடமையாகும். சிறிது நேரம் செலவழித்தால் ஒரு மிஷனரிகள் அறிய வாழ்க்கையை அறிந்து கொள்ளலாம். கர்த்தர் துணை செய்வாராக.

டாக்டர். ஜான் ஸ்காட்டர் (1793-1855)

டாக்டர். ஜான் ஸ்காட்டர் (சீனியர்) உலகத்தின் பல மூலைகளுக்கும் கிறிஸ்துவின் அன்பை எடுத்து சென்றவராவர். இவரது மரபு வழியில் வந்த அடுத்த நான்கு தலைமுறையில் 42 மிஷனரிகள் எழும்பி அனைவரும் சேர்ந்து 1100க்கும் அதிமான வருடங்கள் இறைப்பணியும் மருத்துவப்பணியும் செய்து இயேசுவின் அன்பை உலகத்திற்கு காண்பித்துள்ளனர். டாக்டர். ஜான் ஸ்காட்டரின் ஏழாவது மகனாகிய "ஜான் ஸ்காட்டர் II" க்கு பிறந்தவர் தான் வேலூரில் உள்ள கிறிஸ்டியன் மெடிக்கல் காலேஜ்-ஐ நிறுவிய டாக்டர். ஜான் ஸ்காட்டர்.

தமிழ் மக்களுக்கு டாக்டர். ஜான் ஸ்காட்டரின் குடும்பத்தினர் ஆற்றிய அருட்பணியால் திண்டிவனம், வேலூர், இராணிப்பேட்டை, குடியாத்தம் ஆகிய இடங்களில் அநேக மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். காலரா, பிலேக், மஞ்கல் காமாலை போன்ற உயிர் கொல்லி நோயினால் மரணத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு ஸ்காட்டர் குடும்பத்தினர் செய்த மருத்துவப்பணிகள் இன்றளவும் தமிழ்நாட்டின் வேலூரில் தொடர்ந்து வருகிறது.

இளமையும், கர்த்தரின் அழைப்பும்

டாக்டர். ஜான் ஸ்காட்டர் அமெரிக்காவின் நியூ ஜெர்ஸி மாகாணத்தில் உள்ள ப்ரீஹோல்ட் (FREEHOLD) என்ற ஊரில் ஜேசப் (வக்கீல்) – மரியா ஸ்கட்டர் என்ற தம்பதியினருக்கு 1793-ம் வருடம் செப். 3 தேதி வெல்வ மகனாய் பிறந்தார். New York College Physicians and Surgeons கல்லூரியில் 1813-ல் வருடம் தமது மருத்துவ படிப்பை முடித்து தனது மருத்துவ வாழ்க்கைப் பயணத்தை தொடங்கினார். 1813-ம் வருடம் ஹாரியட் என்ற பெண்ணை திருமணம் செய்தார். அந்த நாட்களில் அதிகளவு மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் மருத்துவர்களுக்கு நல்ல வரவேற்ப்பு இருந்தது. அதுமட்டுமில்லாமல் டாக்டர். ஜான் ஸ்காட்டரின் திறமையும் கனிவோடு நோயாளிகளை கவனிக்கும் திறமையும் அனைவரையும் கவர்ந்ததால் வருடத்திற்கு 2000$ சம்பாதிக்கும் அளவுக்கு மிகிப்பெரிய மருத்துவரானார். ஐந்து வருடங்கள் அமெரிக்காவிலேயே மருத்துவராக பணி செய்ததாலட செல்வமும் புகழும் டாக்டர். ஜான் ஸ்காட்டருக்கு குவிய தொடங்கியது. ஆயினும் கடவுள் பக்தி மிகுந்தவராய் Reformed Church க்கு சென்று கொண்டிருந்தார். அந்த நாட்களில் அநேகரை மனம் திரும்புதலுக்கு நேராய் நடத்தினார்.

1819-ல் வருடத்தில் ஒருநாள் நோயாளியை சந்திக்க ஒருவரின் வீட்டிற்கு சென்றிருந்த பொழுது, அங்கு வரவேற்பறையிலிருந்த ஒரு துண்டு தாளில் செய்தியாகிய "அறுபது கோடி மக்களின் மனமாற்றத்திற்கு சபைகள் என்ன செய்ய வேண்டும்" என்பதை கண்டார். அதன் மூலம் இந்தியா மற்றும் சிலோனின் மக்களுக்கு தேவைப்பட்ட மருத்துவ குறித்து அறிந்தார். அந்த கணமே நமது அருமை இரட்சகர் இயேசுவின் குரலையும் கேட்டார். அது என்னவெனில் " என் பித அனுப்பினதைப் போல நான் உன்னை அனுப்புகிறேன்" அதற்க்கு ஜான் ஸ்காட்டர், "அனுப்பும் ஆண்டவரே நான் போகிறேன்" என்றார். இதற்கு ஜான் ஸ்காட்டரின் தகப்பனார் கடுமையான எதிர்ப்பை தெரிவித்தார். வெல்வ மைந்தன்

உலக பெருவாழ்வை நீத்துவிட்டு, வறுமையை உவந்தேற்று கொண்டு, கடல் கடந்து கண் கானா நாட்டுக்கு சென்று,பசியால் வாடி வதக்கி, பொடிய வெயிலின் கோரப்பிடியில் நலிந்தும் மெலிந்தும் மிஷனரியாக பணியாற்றுவதா? கூடவே வுடாது என் ஜான் ஸ்காட்டரின் கையை பிடித்து கெஞ்சி மன்றாடினார். ஆனால் ஜான் ஸ்காட்டரோ தமது தகப்பனின் கைகளை உதறிவிட்டு ஆண்டவர் இயேசுவின் கரங்களை பற்றிக்கொண்டார்.

தம் கனவரின் தீர்மானத்தை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு தமது இரண்டு வயது பாலகனுடன் இலங்கையை நோக்கி புறப்பட்டார் ஜான் ஸ்காட்டரின் மனைவி. ஜுன் 8 1819–ம், 26 வயது நிரம்பிய ஜான் ஸ்காட்டர் தனது மனைவி மற்றும் தனது 2 வயது மகள் மரியாளுடன் இந்துஸ் கப்பலில் ஏறினார். 1819–ம் வருடம் கல்கத்தாவில் வந்து சேர்ந்தனர் ஸ்காட்டர் தம்பதியினர். ஆறுமாத கால நெடும் கடல் பயணத்தில் கப்பலில் பணி செய்தவர்களுக்கு நற்செய்தி அறிவித்தார் ஜான் ஸ்காட்டர். பின்னர் கல்கத்தாவில் மிஷனரியாக ஊழியம் செய்துகொண்டிருந்த தேவ மொழி பெயர்ப்பாளரும் மிஷனரிகளின் தந்தை எனவும் அழைக்கப்பட்ட "வில்லியம் கேரி–யை" செராம்பூரில் சந்தித்தார். அதன் பின்னர் அவர் வாழ்வில் வேதனைகள் சூலத்தொடங்கியது. தனது 2 வயது மகள் மரியா வயிற்று போக்கினால் அக்டோபர் 25–ம் தேதி மரித்தால். இந்த சூழ்நிலையில் ஜான் ஸ்காட்டர் இவ்வாறு எழுதினார், "கடினமான சோதனை தான் என்றாலும் முறுமுறுப்பதில்லை. இயற்க்கையான சோகங்கள் வர வேண்டும். ஒருவேளை நாங்கள் திரும்பி சென்றால் எனது பெற்றோர்கள் எம்மை மன்னித்து ஏற்றுக்கொள்ளலாம் . இல்லை திருச்சபையின் தலையாகிய கிறிஸ்து என்னை அமெரிக்காவிலிருந்து அழைத்து இந்த மக்கள் மத்தியில் வாழ வைப்பதற்காக நன்றி சொல்கிறேன். அழிந்து போகும் ஆத்துமாவை ஆண்டவர் இயேசுவிடம் சேர்க்கும் பணியை தகுதியற்ற அடியவனிடம் இறைவன் தந்துள்ளார்" என்றார்.பின்னர் அதே வருடம் டிசம்பர் மாதம் ஸ்காட்டர் தம்பதயினர் சிலோன் வந்து சேர்ந்தனர். யாழ்ப்பாணம் பகுதியில் மருத்துவப்பணி செய்ய மிஷன் மூலம் நியமிக்கப்பட்டனர்.

1849–ம் வருடம் மீண்டும் மெட்ராஸில் மருத்துவ பணியோடு ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டார். அந்நாட்களில் ஹாரியட் ஸ்காட்டரின் உடல் நிலை பாதிக்கப்பட்டு 1849–ம் வருடம் நவம்பர் 29–ம் தேதி தமது 54–ம் வயதில் இறைவனிடம் சேர்ந்தார். மரிப்பதர்க்கு முன்பாக ஹாரியட அம்மையார் கண்களை துறந்து "மகிமையான பரலோகம் , மகிமையான இரட்சிப்பு" என்று சொல்லி கண்களை மூடியுள்ளார். ஜான் ஸக்காட்ரை இது மிகவும் பாதித்தாலும் தமக்கு நியமிக்கப்பட்ட மருத்துவ பணியை செய்து, சுவிஷேச துண்டு பிரதிகளை மக்களிடம் கொடுத்து 1854–ம் வருடம் வரை இறைப்பணி செய்து வந்தார். ஒரு நாளைக்கு இரண்டு பிரசங்கங்கள் செய்து வந்த ஜான் ஸ்காட்டர், மனைவி இறந்த பிறகு வேதைனையின் மத்தியிலும் ஒரு நாளைக்கு மூன்று பிரசங்கங்கள் வரை செய்து வந்தார். 1855–ம் ஆண்டு தென் மெரிக்காவிற்கு மருத்துவ மிஷனரியாக சென்று உற்சாகமாய் ஊமியம் செய்த ஜான் ஸ்காட்டர், 1855–ம் வருடம் ஜனவரி மாதம் 13–ம் தேதி இரவு நித்திரையில் இறைவனடியில் சேர்ந்தார். அவரது உடல் மெட்ராஸுக்கு கொண்டுவரப்பட்டு தமது மனைவியின்

கல்லறை அருகிலே, புதைத்து பின்னர் ராணிபோட்டையில் அவர்களது தோட்டத்தில் கோதுமை மணியாய் விதைக்கப்பட்டது.

அன்பு சகோதரர்,
எபிநேசர்

## சகோதரிகள் பகுதி

### கனியுள்ள வாழ்க்கை

என் பிரியமான சகோதர, சகோதரிகளே இந்த இதழின் மூலம் உங்களை சந்திப்பதால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நாம் நம்முடைய வாழ்க்கையில் கர்த்தருக்கு கனியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். நாம் இப்போது வேத வசனம் மூலம் எப்படி வாழ்க்கையில் கனியுள்ளவர்களாக வாழ வேண்டும் என்பதை பற்றி சிந்திக்களாம்.

யோவான் 15:5 நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையெல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.
இந்த வசனத்தின்படி நாம் நம்முடைய வாழக்கையில் அவரில் நிலைத்திருந்தால் கனியுள்ள அதாவது நல்ல கனி கொடுக்கிறவர்களாகவும், மற்றவர்களுக்கு முன் மாதிரியாகவும் இருக்கமுடியும்.

நல்ல மரம் நல்ல கனி கொடுக்கும், கெட்டமரம் கெட்டகனி கொடுக்கும். ஆனால் கர்த்தருடைய வார்த்தைகள் நம்மிலும் நிலைத்திருந்தால் நாம் கேட்டுக்கொள்வது எதுவோ அது நமக்கு கொடுக்கப்படும் என்று இயேசு கூறுகிறார். மேலும் நாம் மிகுந்த கனி கொடுப்பதினால் நாம் பிதாவை மகிமைப்படுத்துகிறோம் இயேசுவுக்கு சீஷராயிருப்போம் – யோவான் 15:4. என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் ; கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்கமாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்.

இயேசுதான் திராட்சைச் செடி பிதா தோட்டக்காரர் அவரில் கனி கொடுக்காதது எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் கனி கொடுக்கிற கொடி எதுவே, அதை அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் செய்கிறார்.

அதாவது இங்கு திராட்சைச் செடி என்பது இயேசுவை குறிக்கிறது நாம் கொடிகள். நாம் அந்த திராட்சைச் செடியோடு அதாவது நாம் இயேசுவோடு நிலைத்திருந்து ஆவிக்குரிய கனியுள்ள வாழ்க்கை நாம் வாழ்வதோடு, நம்குடும்பத்துக்கும், சபைக்கும், மற்றவர்களுக்கும், அந்நிய ஜனங்களுக்கும் கனி கொடுக்கிறவர்களாக இருப்போம்.
சிந்திப்போம் செயல்படுவோம்! மீண்டும் சந்திப்போம். ஆமென்.

கர்த்தரின் பணியில்,
சகோதரி.செலின் டேவிட்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில










# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

96646444

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

23924262 - 97545812

பொருளாளர்

**சகோ. பால் ஜெகநாதன்**

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி. எப்சிபா ஸ்டீஃபன்**

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

60781168


Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Private Circulation only